# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2055/54 - 2018 ජනවාරි මස 26 වැනි සිකුරාදා - 2018.01.26

*2055/54 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.பி. 123/48* (iii)

**(105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச்சட்டம்**

*(105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் 19 (உ) என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 72 ஆம் பிரிவின் கீழ், இலங்கை மருத்துவப் பேரவையின் கலந்தாலோசனையுடனும் மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் பதிவுசெய்தலைப் பெற்றுக் கொள்ளுவதற்கு ஆளொருவரை உரித்துடையவராக்குகின்ற ஏதேனும் தகைமையை வழங்குகின்ற அல்லது அளிக்கின்ற ஒவ்வொரு பல்கலைக்கழகத்தின் அல்லது நிறுவனத்தின் விமரசனங்களைக் கருத்திற்கெடுத்ததன் மேலும் சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

ராஜித சேனாரத்ன,<br>சுகாதார, போசணை மற்றும்<br>சுதேச வைத்திய அமைச்சர்.

கொழும்பு,<br>*2018, சனவரி 25.*

**ஒழுங்குவிதிகள்**

*1. (1) இவ்வொழுங்குவிதிகள் 2018ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மருத்துவ (குறைந்தபட்ச நியமங்களைப் பேணுதல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.*

*(2) இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகள், எத்தேதியன்று பாராளுமன்ற அங்கீகாரம் பற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படுகின்றதோ அத்தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.*

*2. ஓர் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் அல்லது நிறுவனத்தில் மருத்துவக் கல்விக்கான குறைந்தபட்ச நியமங்கள் இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறாக இருத்தல் வேண்டும்.*


1A - PG 3905 - 507 (2018/01)


*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*3.* *இணைப்பின் கீழ் அல்லது ஓர் இணைசோடியான மருத்துவ நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ், ஏதேனும் இலங்கை அல்லது வெளிநாட்டு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது நிறுவனம் தனியாக அல்லது இணைந்து மருத்துவத் தகைமையொன்றை வழங்குகின்ற அல்லது அளிக்கின்ற இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ளதான ஒவ்வொரு பல்கலைக்கழகமும் அல்லது நிறுவனமும் இதற்கான அட்டவணையில் தரப்பட்ட குறைந்தபட்ச நியமங்கள் அதனது மருத்துவக் கல்வியைக் கொண்டு நடாத்துவதில் அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் அல்லது நிறுவனத்தினால் அமைந்தொழுகப்படுகின்றன வென்பதையும் பேணப்படுகின்றனவென்பதையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.*

*4.* *இவ்வொழுங்குவிதிகளின் நோக்கங்களுக்கு -*

*“மருத்துவக்கல்வி” என்பது, மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் 19உ என்னும் பிரிவினால் அதற்கு குறித்தளிக்கப்பட்டவாறான அதே கருத்தைக் கொண்டதாதல் வேண்டும்;*

*“அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம்” என்பது, மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் 19உ என்னும் பிரிவினால் அதற்கு குறித்தளிக்கப்பட்டவாறான அதே கருத்தைக் கொண்டதாதல் வேண்டும்; அத்துடன்*

*“இணைசோடியான மருத்துவ நிகழ்ச்சித்திட்டம்” என்பது, ஒவ்வொரு பல்கலைக்கழகமும் அல்லது நிறுவனமும் தனது சொந்த மருத்துவக் கல்வியை சுயாதீனமாக அளிக்கின்றவிடத்து, அதே நாட்டில் அல்லது இரண்டு வேறுபட்ட நாடுகளிலுள்ள இரண்டு வேறான அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள் அல்லது நிறுவனங்களில் நடாத்தப்படும் மருத்துவக் கல்வியின் அளிப்புக்கு இட்டுச்செல்கின்ற நிகழ்ச்சித்திட்டம் அல்லது கற்கைநெறி என்று பொருள்படும்.*

**அட்டவணை**

***(ஒழுங்குவிதி 2)***

**குறைந்தபட்ச நியமங்கள்**

**பணியும் விளைவுகளும்:**

*1.* *மருத்துவக் கல்வியை நடாத்துகின்ற ஒவ்வொரு பல்கலைக்கழகத்திற்கும் அல்லது நிறுவனத்திற்கும் நன்கு வரையறுக்கப்பட்ட பணியொன்று இருத்தல் வேண்டும்; அது, அதன் பிரதான அக்கறைகொண்டுள்ளோரின் பங்குபற்றுகையுடன் வகுத்தமைக்கப் படுதல் வேண்டும். பணிக்கானகூற்று பின்வருவனவற்றுக்குக் கவனஞ்செலுத்துதல் வேண்டும்:-*

*(அ) சமுதாயத்தின் சுகாதாரத் தேவைகளும் சுகாதாரக் கவனிப்பு முறைமையும்;*

*(ஆ) மருத்துவ ஆராய்ச்சி;*

*(இ) சமூகப் பொறுப்பு, உயர்தொழிற்துவம் மற்றும் ஒழுக்கவியல்; அத்துடன்*

*(ஈ) உலகளாவிய சுகாதாரம்.*

*2.* *கல்விசார் மூலோபாயம், அடிப்படை மட்டத்தில் தகுதிவாய்ந்தவர்களாகவுள்ள மருத்துவத் தொழிலாளர்களைத் தோற்றுவிப்பதற்குத் திட்டமிடப்படுதல் வேண்டும்; அது, பின்வருவனவற்றுக்கான அடிப்படையாக அமைதல் வேண்டும்:-*

*(அ) சுகாதாரத்துறையில் ஒரு மருத்துவத் தொழிலாழரென்ற பங்கை ஏற்றல்;*

*(ஆ) மருத்துவத்தின் ஏதேனும் கிளையில் எதிர்காலத் தொழில்;*

*(இ) ஏதேனும் பட்டப்பின் மருத்துவப் பயிற்சி; அத்துடன்*

*(ஈ) ஆயுட்காலக் கற்றலுக்கான ஈடுபாடு.*

*3.* *பின்வருவன தொடர்பான கொள்கைகளை வகுத்தமைத்து அமுலாக்குவதற்குப் பல்கலைக்கழகமானது அல்லது நிறுவனமானது நிறுவனஞ்சார் தன்னாட்சியைக் கொண்டிருத்தலும் பேணுதலும் வேண்டும்:-*

*(அ) பாடவிதானத்தின் வடிவமைப்பும் உள்ளீடுகளும் மதிப்பீடும்; அத்துடன்*

*(ஆ) அவற்றை அமுல்படுத்துவதற்காகக் குறித்தொதுக்கப்பட்ட நிதிசார் மற்றும் மனித வளங்களின் பயன்பாடு.*

*மேலேயுள்ள நோக்கங்களுக்காக, மருத்துவக்கல்விசார் தலைவரின் தலைமைத்துவத்தின்கீழான ஒரு குழு பல்கலைக்கழத்தினால் அல்லது நிறுவனத்தினால் தாபிக்கப்படுதல் வேண்டும்; அது, பாடவிதானங்களிலான புதுமாற்றங்களுட்பட, உட்கருதப்பட்ட அதன் கல்விசார் விளைவை உறுதிப்படுத்துவதற்கு, பாடவிதானத்தையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் திட்டமிடுவதற்கும் அமுலாக்குவதற்குமான பொறுப்பையும் அதிகாரத்தையும் கொண்டிருத்தல் வேண்டும். குழுவானது, மருத்துவப் பட்டதாரிகள் எந்தச் சூழலில் பணிபுரிவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றனரோ அந்தச் சூழலிலிருந்து உள்ளீடுகளை நாடுதல்*

வேண்டுமென்பதுடன், தோதானவிடத்து, அதற்கிணங்க நிகழ்ச்சித்திட்டங்களைத் திரிபுபடுத்துதலும் வேண்டும். கொள்கைகளை வகுத்தமைப்பதிலும் அமுலாக்குவதிலும், குழுவானது, விசேடமாக அதன் பாடவிதானத்தைத் திட்டமிடுதலில், முகாமை செய்தலில் மற்றும் மதிப்பீடுசெய்தலில் மற்றும் மாணவர்கள் தொடர்பான ஏனைய கருமங்களில் மாணவப் பிரதிநிதிகளின் பங்குபற்றுகையைப் பெற்றுக்கொள்ளலாம்.

**கல்விசார் நிகழ்ச்சித்திட்டம்:**

4. பின்வருவனவற்றுக்குத் திட்டமிடப்பட்ட போதனைசார் மற்றும் கற்றல் முறைகளுடன்சேர்த்து, நன்கு வகுத்தமைக்கப்பட்ட, விசாலமான பாடவிதான மாதிரியொன்று இருத்தல் வேண்டும்:-

(அ) தேவைப்பட்ட சிகிச்சைசார் தேர்ச்சிகளுடனும் அடியுளதவு கோட்பாட்டளவிலான அடிப்படை பற்றிய சிறந்த அறிவுடனும் தகுதிவாய்ந்த, கருணையுள்ள மருத்துவத் தொழிலாளர்களைத் தோற்றுவித்தல்;

(ஆ) விஞ்ஞானமுறை மற்றும் சான்று அடிப்படையிலான மருத்துவத்தின் நெறிகளுட்பட, பகுப்பாய்வுசார் மற்றும் அதிமுக்கியமான சிந்தனையை அதிகரிப்பதற்கு ஆராய்ச்சியிலான தேர்ச்சிகளைப் புகட்டுதல்;

(இ) மருத்துவத்தின் பண்புநயமுடைய தொழிலுக்காகத் தேவைப்பட்ட ஒழுக்கவியற்சார் மற்றும் உயர்தொழிற்சார் நடத்தையை வளர்த்தல்;

(ஈ) ஆயுட்காலக் கற்போரைத் தோற்றுவிப்பதற்குச் சுயபிரதிபலிப்பு மற்றும் சுயகற்றல் தேர்ச்சிகளைச் சிறிதுசிறிதாகப் புகட்டுதல்;

மற்றும் அது, சமத்துவ நெறிக்கிணங்க வழங்கப்படுதல் வேண்டும்.

5. பல்கலைக்கழகத்தின் அல்லது நிறுவனத்தின் பாடவிதானம், மற்றவற்றுக்கிடையில், பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்:-

(அ) சிகிச்சைசார் விஞ்ஞானத்தைப் பெறுவதற்கும் பயன்படுத்துவதற்கும் அடிப்படையாகவுள்ள விஞ்ஞான அறிவையும், கருத்துக்களையும், முறைகளையும் புரிந்துகொள்வதற்கு அடிப்படை உயிரிமருத்துவ விஞ்ஞானங்களிலிருந்தான பங்களிப்புக்கள். அடிப்படை உயிரிமருத்துவ விஞ்ஞானங்கள் சிகிச்சைசார் விஞ்ஞானங்களுக்குப் போதிய அடிப்படையை வழங்குவதற்குத் தேவைப்படுத்தப்பட்டவாறு, உடற்கூற்றியல், உயிரிஇரசாயனவியல் மற்றும் போசணை, கல உயிரியல், மரபியல், தடுப்பாற்றியல், நுண்ணுயிரியியல் (நுண்ம ஆய்வியல், காளானியல், ஒட்டுண்ணியல் மற்றும் நோய்நுண்ணியல் உட்பட) மூலக்கூற்று உயிரியல், நோயியல், வாதகவியல் மற்றும் உடலியங்கியல் என்பவற்றை உள்ளடக்கும்.

(ஆ) (i) மாந்தரியல், உளவியல் மற்றும் சமூகவியலின் மருத்துவ அம்சங்களை உள்ளடக்கவேண்டிய நடத்தைசார் மற்றும் சமூக விஞ்ஞானங்கள்;

(ii) உயிரிபுள்ளி விபரங்கள், கொள்ளைநோயியல், உலகளாவிய சுகாதாரம், முதனிலைச் சுகாதாரம், உடனலம், சுகாதார மேம்படுத்துகை மற்றும் சமூக, தடுப்பு மருத்துவத்தை உள்ளடக்கவேண்டிய சமுதாய மருத்துவம் மற்றும் பொதுச் சுகாதாரம்;

(iii) வைத்தியரின் நடத்தை மற்றும் முடிவுசெய்தலுடன் தொடர்புபட்ட விழுமியங்கள், உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள் போன்ற மருத்துவத் தொழிலிலான ஒழுக்கப்பிரச்சினைகளைக் கையாளுகின்ற மருத்துவ ஒழுக்கவியல்; அத்துடன்

(iv) உயர்தொழிலினதும் மருத்துவத் தொழிலினதும் சுகாதாரக் கவனிப்பு வழங்கல் முறைமையின் சட்டங்களையும் வேறு ஒழுங்குவிதிகளையும் கையாளுகின்ற மருத்துவச் சட்டவியல், சிகிச்சைசார் சட்ட மருத்துவம் மற்றும் சட்ட நோயியல், என்பவற்றிலிருந்தான பங்களிப்புக்கள். இந்நோக்கத்துக்காக, முதனிலைக் கவனிப்பு, சுகாதார மேம்படுத்துகை மற்றும் தடுப்பு மருத்துவம் என்பவற்றில் ஈடுபடுவதற்கு, மாணவர்கள், ஒரு சமுதாய/முதல் தொடர்புக் கவனிப்பு அமைப்பில் திட்டமிடப்பட்ட கற்றலில் குறைந்தபட்சம் இருநூறு மணித்தியாலங்களைக் கொண்ட காலப்பகுதிக்கும், சிகிச்சைசார் சட்ட மருத்துவத்தில் மற்றும் சட்ட நோயியலில் குறைந்தபட்சம் ஐம்பது மணித்தியாலங்களைக்கொண்ட காலப்பகுதிக்கும் ஈடுபடுதல் வேண்டும்.

(இ) பட்டத்துக்குப்பின்னர் தோதான உயர்தொழிற்சார் பொறுப்பை ஏற்பதற்குப் போதிய அறிவையும் குறித்துரைக்கப்பட்ட சிகிச்சைசார் தேர்ச்சிகளையும் மாணவர்கள் பெறுவதனை உறுதிப்படுத்துவதற்குச் சிகிச்சைசார் விஞ்ஞானங்களிலிருந்தான பங்களிப்புக்கள். சிகிச்சைசார் விஞ்ஞானங்கள், பொது மருத்துவத்தையும் அதன் உபதனித்துவத் துறைகளையும் (உ.ம். இருதயநோயியல், நரம்பியல்), சத்திர சிகிச்சையையும் அதன் உபதனித்துவத்துறைகளையும் (உ.ம். குழந்தை மருத்துவவியல், நரம்புச் சத்திரசிகிச்சை), பெண்ணோயியலும் மகப்பேற்றியலும், குழந்தை மருத்துவவியலும் அதன் உபதனித்துவத்துறைகளும், குடும்ப மருத்துவம் (பொது மருத்துவத்தொழில்), உளநலவியல் என்பவற்றையும் உள்ளடக்கும்.

இந்நோக்கத்துக்காக, மாணவர்கள், நோயாளர் கவனிப்பில் தேவைப்பட்ட அனுபவத்தைப் பெறுவதற்கென, இயைபான சிகிச்சைசார் அமைப்புக்களில் போதிய எண்ணிக்கையினரான நோயாளர்களுடன் திட்டமிடப்பட்ட கிரமமான தொடர்பு கொள்ளுதலில், கற்கை நிகழ்ச்சித்திட்டத்தில் ஆகக்குறைந்தது மூவாயிரம் மணித்தியாலங்களைக்கொண்ட கற்றலில் ஈடுபடுதல் வேண்டும்.

(ஈ) தோதானவிடத்து, பின்வருமாறு, உபதனித்துவத்துறைகளுடன் பாரிய சிகிச்சைசார் கற்கைநெறிகளிலான பயிற்சிக் காலப்பகுதிகள்:

(i) வைத்தியசாலை அடிப்படையிலான சிகிச்சைசார் பயிற்சியில் உள்ளக மருத்துவத்திலும் தொடர்புபட்ட உபதனித்துவத்துறைகளிலும் (இருதய நோயியல், சரும நோயியல், நரம்பியல் மற்றும் மேகநோயியல் பாலியல் ரீதியாக கடத்தப்படும் நோய்கள் உட்பட) குறைந்தபட்சம் எண்ணூறு மணித்தியாலங்களைக்கொண்ட கற்றல்;

(ii) வைத்தியசாலை அடிப்படையிலான சிகிச்சைசார் பயிற்சியில் சத்திரசிகிச்சை மற்றும் தொடர்புபட்ட தனித்துவத் துறைகளில் (உணர்வழிவியல், கண்மருத்துவவியல், என்புமுறிவு சத்திரசிகிச்சை மற்றும் காது, மூக்கு தொண்டை இயல் உட்பட) குறைந்தபட்சம் எண்ணூறு மணித்தியாலங்கள் கற்றல்;

(iii) வைத்தியசாலை அடிப்படையிலான சிகிச்சைப் பயிற்சியில் மகப்பேற்றியல் மற்றும் பெண் நோயியலில் குறைந்தபட்சம் நானூறு மணித்தியாலங்கள் கற்றல்;

(iv) வைத்தியசாலை அடிப்படையிலான சிகிச்சைப் பயிற்சியில் குழந்தை மருத்துவத்தில் குறைந்தபட்சம் நானூறு மணித்தியாலங்கள் கற்றல்; அத்துடன்

(v) வைத்தியசாலை அடிப்படையிலான சிகிச்சைப் பயிற்சியில் உளநலவியலில் குறைந்தபட்சம் இருநூறு மணித்தியாலங்கள் கற்றல்.

(vi) சிகிச்சைசார் துறைகளில் கற்றலின் குறைந்தபட்ச மணித்தியாலங்கள் சமூக அடிப்படையிலான அமைப்பொன்றில் மணித்தியாலங்களில் ஐந்திலொன்று மேற்படாது உள்ளடக்குதல் வேண்டும்.

6. பின்வருவனவற்றைச் செய்தல் பல்கலைக்கழகத்தின் அல்லது நிறுவனத்தின் கடமையாதல் வேண்டும்

(அ) அடிப்படை உயிரிமருத்துவ, நடத்தைசார் மற்றும் சமூக அத்துடன் சிகிச்சைசார் பாடங்களுக்கு இடையில் தோதான ஒருங்கிணைப்பை உறுதிப்படுத்துவதற்கு கற்கைநெறிகளின் உள்ளடக்கம், அளவு மற்றும் தொடர்ச்சியான பாடவிதானத்தை விபரித்தல்;

(ஆ) விரும்பிய கற்றல் விளைவுகளின் சாதனைக்கு வசதியளிப்பதற்கான கற்பித்தல் மற்றும் கற்றல் முறைகள் பற்றி சுமூகமான நிலையை உறுதிப்படுத்தல்;

(இ) நோயாளரைப் பாதுகாப்பதற்கு தோதான கவனத்துடன் சிகிச்சைசார் பயிற்சியை ஒழுங்கமைத்தல்; அத்துடன்

(ஈ) கல்வி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் பட்டப்படிப்பின் பின்னர் பயிற்சியின் அடுத்துப்பின்னரான கட்டங்கள் அல்லது தொழில் என்பவற்றுக்கு இடையில் தொழிற்பாட்டு இணைப்பை உறுதிப்படுத்தல்.

***மாணவர்கள் பற்றிய மதிப்பீடு***

7. பல்கலைக்கழகம் அல்லது நிறுவனம் ஆனது மாணவர்களின் செயலாற்றுகை மதிப்பீடு மற்றும் அவர்கள் சித்தியடையும் புள்ளிகள், தரஅமைவு மற்றும் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் உள்ளேற்பு எண்ணிக்கை என்பற்றை நிர்ணயிக்கும் கட்டளைக்கல் என்பனவற்றில் பின்பற்றப்படவேண்டிய நெறிகள், முறைகள் மற்றும் நடைமுறைகளை வரையறுத்தலும், குறித்துரைத்தலும் வெளியிடுதலும் வேண்டும். அத்தகைய நெறிகள், முறைகள் மற்றும் நடைமுறைகள் என்பன –

(அ) உட்கருதப்பட்ட கல்விசார் விளைவுகள் மற்றும் போதனைசார் முறைகள் என்பவற்றுடன் இணைந்து தெளிவாகவும் ஆக்கபூர்வமாகவும் இருத்தல் வேண்டும்;

(ஆ) அறிவு, திறன்கள் மற்றும் மனப்பாங்குகளை மேவுவதற்கென போதுமானளவு பரந்தளவிலான மதிப்பீட்டு முறைகளை உள்ளடக்குதல் வேண்டும்;

(இ) வெளிநாட்டு நிபுணர்களினால் நுனிந்தாராய்வுக்கு உட்படுத்துதல் வேண்டும் என்பதுடன் அக்கறை முரண்பாடு இல்லாதிருத்தலும் வேண்டும்; அத்துடன்

(ஈ) மாணவரின் கற்றலை மேம்படுத்தலும் கல்விசார் முன்னேற்றம் பற்றிய கற்றல் மற்றும் விளைவுகள் ஆகிய இரண்டிற்குமான வழிகாட்டலுக்கு ஆக்க மற்றும் கூட்டு மதிப்பீடு பற்றி தோதான சமநிலையை வழங்குதலும் வேண்டும்.

**மாணவர்கள்**

8. (அ) பல்கலைக்கழகம் அல்லது நிறுவனமானது புறவய கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு மாணவர்கள் பற்றிய கொள்கை ஒன்றை வகுத்தமைத்தலும் அமுலாக்குதலும் வேண்டும். என்பதுடன் மாணவர்களின் தெரிவு நடைமுறை பற்றிய தெளிவான கூற்றொன்றை ஆக்குதலும் வேண்டும். இக்கொள்கையானது மாற்றுத்திறனாளிகளான மாணவர்களை அனுமதித்தல் பற்றி கவனத்திற் கொள்ளுதலும் வேண்டும் என்பதுடன் மாணவர்களை ஒரு நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து அல்லது பல்கலைக்கழகத்திலிருந்து அல்லது நிறுவனத்திலிருந்து வேறொன்றிற்கு மாற்றுதலும் வேண்டும்.

(ஆ) மாணவர்கள் ஆகக் குறைந்தது பன்னிரெண்டு ஆண்டு பாடசாலைக் கல்வியுடன் இரண்டாம் நிலைப்பாடசாலையிலிருந்து நேரடியாக கல்விசார் நிகழ்ச்சித்திட்டத்திற்கு நுழைகின்ற பட்சத்தில், மருத்துவ கல்விசார் நிகழ்ச்சித்திட்டக் காலப்பகுதி ஆகக்குறைந்தது ஐந்து கல்விசார் ஆண்டுகளாதல் வேண்டும்.

(இ) பல்கலைக்கழகத்திற்கு அல்லது நிறுவனத்திற்கு அனுமதிக்கப்படும் மாணவர் ஒவ்வொருவரும், உயிரியல் மற்றும் இரசாயனவியல் பாடங்களில் திறமைச் சித்திகளிலான குறைந்தபட்ச தராதரங்களுடன் உயிரியல், இரசாயனவியல் மற்றும் பௌதீகவியல் பாடங்களில் ஒரேதடவையிலும் அதேதடவையிலும் இலங்கை கல்விப்பொதுத் தராதர (உயர்தரப்) பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ஈ) பல்கலைக்கழகம் அல்லது நிறுவனமானது, மருத்துவக் கல்விசார் நிகழ்ச்சித்திட்டத்தின் எல்லாக் கட்டங்களிலும் மாணவரின் உள்ளேற்பு அளவை குறித்துரைத்தல் வேண்டும் என்பதுடன் அதன் கொள்ளளவுடன் தொடர்பு படுத்தப்படுதலும் வேண்டும்.

(உ) பல்கலைக்கழகம் அல்லது நிறுவனமானது -

(i) மாணவர்களின் முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டு அதனது மாணவர்களின் கல்விசார் உளவளத்துறைக்கென ஒருமுறைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(ii) அவசியமானவிடத்து, பரிகார போதனை உட்பட மாணவர் ஆதரவு நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை வழங்குதல் வேண்டும்;

(iii) உளவளத்துறை மற்றும் ஆதரவு தொடர்பில் அந்தரங்கத்தன்மையை உறுதிப்படுத்தல் வேண்டும்; அத்துடன்

(iv) மாணவர் கல்விசார் செயற்பாடுகள், பொழுதுபோக்கு செயற்பாடுகளை ஊக்குவித்தலும் மாணவர் ஒழுங்கமைப்புகளுக்கு வசதியளித்தலும்.

**கல்விசார் பணியாட்டொகுதி**

9. பல்கலைக்கழகம் அல்லது நிறுவனமானது பின்வருவனபற்றிய கொள்கைகளை வகுத்தமைத்து அமுலாக்குதல் வேண்டும்.

(அ) போதியளவான பாடவிதானத்தை வழங்குவதற்கும் அத்துடன் மருத்துவ மற்றும் மருத்துவம்சாரா கல்விசார் பணியாட்டொகுதிக்கிடையேயான சமநிலையும், முழுநேர மற்றும் பகுதிநேர கல்விசார் பணியாட்டொகுதிக்கிடையேயான சமநிலையையும் அத்துடன் கல்விசார் மற்றும் கல்விசாரா பணியாட்டொகுதிக்கிடையேயான சமநிலையையும் பேணுவதற்கும் என அடிப்படை உயிரிமருத்துவ விஞ்ஞானங்கள், நடத்தைசார் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் மற்றும் சிகிச்சை விஞ்ஞானங்களின் ஆசிரியர்களிடையேயான வகை, பொறுப்புக்கள் மற்றும் சமநிலையை எடுத்துக்காட்டி (இலங்கைப் பல்கலைக்கழகங்கள் விடயத்தில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் விதித்துரைக்கப்பட்ட வற்றுடன் ஒத்திருக்கவேண்டியதான) பணியாட்டொகுதி ஆட்சேர்ப்பு, தெரிவு மற்றும் பதிவியுயர்வு;

(ஆ) அடிப்படை உயிரி மருத்துவ விஞ்ஞானங்கள், நடத்தைசார் மற்றும் சமூகவிஞ்ஞானங்கள் அத்துடன் சிகிச்சைசார் விஞ்ஞானங்களை கற்பிப்பதில் அதனது கல்விசார் பணியாட்டொகுதியின் பொறுப்புக்கள்:-

(இ) (i) கற்பித்தல் ஆராய்ச்சி மற்றும் சேவைப்பணிகளுக்கிடையேயான சமநிலையை அனுமதிக்கும்;

(ii) கற்பித்தல், ஆராய்ச்சி மற்றும் சேவைத் தகைமைகளின் மீது தோதான அழுத்தத்துடன் திறமைவாய்ந்த கல்விசார் செயற்பாடுகளின் ஏற்றங்கீகரிப்பை உறுதிப்படுத்தும்;

(iii) சிகிச்சைசார் சேவைப்பணிகள் மற்றும் ஆராய்ச்சி என்பது கற்பித்தல் மற்றும் கற்றலில் பயன்படுத்தப்படுகின்றது என்பதனை உறுதிப்படுத்தும்; அத்துடன்

(iv) ஆசிரியர் பயிற்சி, சாதனை மற்றும் மதிப்பீட்டிற்கு ஆதரவளிக்கும்.

பணியாட்டொகுதியின் செயற்பாடும் அபிவிருத்தியும்.

10. பல்கலைக்கழகம் அல்லது நிறுவனமானது:-

(அ) ஆசிரியர் - மாணவர் விகிதாசாரத்திற்கு ஒத்திசைவானதாதல் வேண்டும், இணைந்த போதனா வைத்தியசாலைகள் மற்றும் வேறு சுகாதார கவனிப்பு அமைப்புகளில் நிரந்தர கல்விசார் பணியாட்டொகுதி மற்றும் அதிகளவான விசேட நிபுணர்களைக் கொண்ட பீடம் என்பவற்றைக் கருத்திற்கொண்டு ஒவ்வொரு பதினான்கு மருத்துவ மாணவர்களிற்கு ஒரு ஆசிரியர் என்ற விகிதத்திற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்;

(ஆ) நோயாளர் கவனிப்பில் ஈடுபடும் மருத்துவ ரீதியாகத் தகைமை பெற்ற எல்லாப் பணியாட்டொகுதியினரும், இயைபான நாட்டில் மருத்துவம்சார் உயர்தொழில்களை பதிவு செய்வதற்குப் பொறுப்பாக குறித்தளிக்கப்பட்ட குழுவில் பதிவு செய்யப்படுவதை உறுதிப்படுத்துதல்;

(இ) ஆகக்குறைந்தது கலாநிதி மட்டத்திலான பட்டப்பின் படிப்பு தகைமைகளைக் கொண்டுள்ள நிரந்தர ஊழியக் கோப்பிலுள்ள கல்விசார் பணியாட்டொகுதியின் குறைந்தபட்சம் அரைப் பகுதியினரைக் கொண்டிருத்தல்; அத்துடன்

(ஈ) ஒவ்வொரு தனியாள் பணியாட்டொகுதி உறுப்பினரும் மருத்துவ பாடவிதானத்தின் ஒழுங்கமைப்பு தொடர்பான போதுமான அறிவைக் கொண்டிருப்பதை உறுதிப்படுத்துதல்.

**கல்விசார் வளங்கள்**

11. பல்கலைக்கழகம், அல்லது நிறுவனம் பாடவிதானம், போதியளவில் வழங்கப்படமுடியும் என்பதை உறுதிப்படுத்துவதற்கு, அதன் பணியாட்டொகுதினருக்கும் மாணவர்களுக்கும் போதுமான பௌதீகரீதியிலான வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பௌதிகரீதியிலான வசதிகள் பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) சிறந்த ஒலியியல், கட்புல - செவிப்புல உதவிகள் மற்றும் ஒவ்வொரு தொகுதியிலும் உள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கைக்கான ஆசனக்கொள்ளளவுடன் ஆகக்குறைந்தது இரண்டு விரிவுரை மண்டபங்கள்; ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒரு தொகுதியில் எல்லா மாணவர்களுக்கும் இடவசதியளிக்கக்கூடிய பரீட்சை மண்டபங்கள்; அத்துடன் கல்விப் பயிற்சிகள் மற்றும் சிறிய குழுச் செயற்பாடுகளுக்காக போதிய எண்ணிக்கையிலான சிறிய வகுப்பறைகள் தொகுதியொன்றின் உள்ளேற்பு ஒன்று ஆண்டொன்றுக்கு நூறு மாணவர்களாகவிருந்தால், அச்சந்தர்ப்பத்தில் அது ஒவ்வொன்றிலும் குறைந்தபட்சம் பதினைந்து மாணவர்களுக்கான ஆசனக் கொள்ளளவுடன் குறைந்தபட்சம் பன்னிரெண்டு வகுப்பறைகளை/கல்விப் பயிற்சி அறைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் ஒரு பெரிய மாணவர் உள்ளேற்பு ஒன்றிற்கு இவ்வசதிகள் நேரொத்த வகையில் அதிகமாகவிருத்தல் வேண்டும்;

(ஆ) பணியாட்டொகுதியினர் மற்றும் மாணவர்களுக்கு பாதுகாப்பான கற்கைச் சூழல் ஒன்றுடன் அடிப்படை உயிரியல் மருத்துவ விஞ்ஞானங்களைக் கற்பிப்பதற்கான தோதான ஆய்வுகூடங்கள் மற்றும் நூதனசாலைகள்; அத்துடன்

(இ) நடப்பு பதிப்புகளைக் கொண்ட பாடநூல்கள், உசாத்துணை நூல்கள் மற்றும் பருவவிதழ்களையும் இணையத்தினூடாக அல்லது வேறு வகையில் உள்நாட்டு மற்றும் சர்வதேச சஞ்சிகைகளை அணுகுவதற்கு போதிய வசதிகளையும் கொண்ட ஒரு நூலகம்.

12. பல்கலைக்கழகம் அல்லது நிறுவனம் போதிய எண்ணிக்கையிலானதும் வகுதியினரானதுமான நோயாளர்கள், போதிய மேற்பார்வையுடனான சிகிச்சைப் பயிற்சி வசதிகள் உட்பட கற்பித்தலுக்கென போதிய சிகிச்சைசார் அனுபவத்தை மாணவர்களுக்கு வழங்குவதற்கு வேறு இணைக்கப்பட்ட போதனா வைத்தியசாலைகள் மூலம் குறைநிரப்பக்கூடியவாறான பல்கலைக்கழக அல்லது நிறுவன அலகுகளுடனான குறைந்தபட்சம் ஒரு வைத்தியசாலைக்கு அணுக்கத்தைக் (அணுகுதலைக் கொண்டிருத்தல் வேண்டும். கற்பித்தலுக்கு பயன்படுத்தப்படும் வைத்தியசாலைகள், நியமம் 5 (ஈ) இல் குறித்துரைக்கப்பட்டவாறு பிரதான சிகிச்சைசார் தனித்துவத்துறைகளில் பயிற்சி வசதிகளை உள்ளடக்குதல் வேண்டும்; உள்ளக மருத்துவம் மற்றும் தொடர்பான உபதனித்துவத்துறைகள் (இருதய சிகிச்சை, சரும நோயியல், நரம்பியல் மற்றும் மேக நோயியல் உட்பட); சத்திரசிகிச்சை மற்றும் தொடர்பான உப தனித்துவத்துறைகள் (மயக்க மருந்தியல், கண் மருத்துவவியல் எலும்பியல் சத்திரசிகிச்சை மற்றும் செவி-மூக்கு- தொண்டையியல் உட்பட); மகப்பேற்றியல் மற்றும் பெண்ணோயியல்; குழந்தை மருத்துவம் சேய் மருத்துவம்; மற்றும் உளநலவியல்; விபத்து மற்றும் அவசர கவனிப்பு தொகுதியொன்றின் உள்ளேற்பொன்று.

ஆண்டொன்றுக்கு நூறு மாணவர்களாகவிருந்தால், அச்சந்தர்ப்பத்தில் அது பல்கலைக்கழக அலகுகள் (உள்ளக மருத்துவம், பொது சத்திரசிகிச்சை, மகப்பேற்றியல் மற்றும் பெண்ணோயியல் மற்றும் குழந்தை மருத்துவத்தில் ஆகக்குறைந்தது ஒவ்வொன்றும் நூறு படுக்கைகளுடன்) மற்றும் முன்னைய ஆண்டில் குறைந்தபட்சம் 75% படுக்கை இருப்பாட்சி வீதத்துடனான உச்சஎல்லை உட்பட குறைந்தபட்சம் எழுநூறு படுக்கைகளுடன் கற்கைக்காக பயன்படுத்தப்படும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இணைக்கப்பட்ட வைத்தியசாலைகளைக் கொண்டிருத்தல் வேண்டும். ஒரு பெரியளவிலான மாணவர் உள்ளேற்பு ஒன்றிற்காக இவ்வசதிகள் விகிதாசார அடிப்படையில் அதிகமாகவிருத்தல் வேண்டும். ஒன்றுக்குமேற்பட்ட வைத்தியசாலை கற்பித்தலுக்கென பயன்படுத்தப்படுமிடத்து, எல்லா வைத்தியசாலைகளும் இணைந்து போதான வைத்தியசாலையொன்றினால் எதிர்பார்க்கப்பட்ட சேவையை வழங்குதல் வேண்டும். உதாரணமாக நோயியல், உயிரியல் இரசாயனம் மற்றும் நுண்ணுயிரியல், கதிரியக்கவியல்/மனோநிலைசார் சேவைகளின் ஆய்வுகூடச்சேவை.

13. பல்கலைக்கழகம் அல்லது நிறுவனம் போதிய சமுதாய அடிப்படையிலான சிகிச்சை அனுபவத்தை மாணவர்களுக்கு வழங்குவதற்கு களத்தொழில் இடப்பரப்பொன்றிற்கான அணுக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், நியமம் 5 (ஆ) இல் தேவைப்படுத்தப்பட்டவாறு சிகிச்சைசார் சட்ட மருத்துவம் மற்றும் நோயியல் பயிற்சிக்கான வசதிகளுக்கான அணுக்கத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

14. மாணவர்களுக்கான வேறு வாழ் வசதிகள் பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(i) போதிய கற்கை இடவசதி, ஓய்விடங்கள் மற்றும் கழுவும் அறைகள்;

(ii) தகவல் தொழினுட்ப வசதிகள்;

(iii) பொழுதுபோக்கு வசதிகள்;

(iv) புறத் திருத்திய செயற்பாடுகள்;

(v) உணவளித்தல் மற்றும் வீடமைப்பு வசதிகள்;

(vi) சுகாதார கவனிப்பு வசதிகளுக்கான அணுக்கம்; அத்துடன்

(vii) போக்குவரத்து வசதிகள்.

15. பல்கலைக்கழகம் அல்லது நிறுவனம் பின்வரும் கொள்கைகளை வகுத்தமைத்தலும் அமுல்படுத்துதலும் வேண்டும்:-

(அ) கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் தோதான பயன்படுத்தலைக் குறிப்பிடுபவை;

(ஆ) மருத்துவ ஆராய்ச்சிக்கும் கல்விக்கும் இடையிலான உறவைப் போற்றி வளர்த்தல் மற்றும் ஆராய்ச்சி வசதிகளையும் முன்னுரிமைகளையும் விபரித்துக்கூறுதல்;

(இ) தேவைப்படுமிடத்து கல்விசார் நிபுணத்துவத்துக்கான அணுக்கத்தை, குறிப்பாக பாடவிதானவிருத்தி மற்றும் மருத்துவக் கல்வியின் செயன்முறை, தொழிலாற்றுகை மற்றும் பிரச்சினை என்பவற்றைக் கையாளுகின்ற கற்பித்தல் மற்றும் மதிப்பீட்டு முறைகளை அனுமதித்தல்; அத்துடன்

(ஈ) வேறு கல்விசார் நிறுவனங்களுடனான தேசிய மற்றும் சர்வதேச ஒத்தாசைக்கு வழிவகுத்தல்.

**நிகழ்ச்சித்திட்ட மதிப்பீடு**:

16. பல்கலைக்கழகம் அல்லது நிறுவனம் பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) அதன் கல்விசார் முன்னேற்றத்தினதும் விளைவினதும் வழக்கமுறையிலான கண்காணிப்புக்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை இடம்பெறச் செய்தல் வேண்டும்;

(ஆ) பின்வருவன குறித்த நிகழ்ச்சித்திட்ட மதிப்பீட்டுக்கான பொறிமுறையொன்றைத் தாபித்து பிரயோகித்தல்:-

(i) பாடவிதானம் மற்றும் அதன் பிரதான அமைப்புக் கூறுகளை கவனத்திற்கொள்ளுதல்;

(ii) மாணவர்களின் முன்னேற்றத்தைக் கவனத்திற்கொள்ளுதல்;

(iii) அக்கறைகளை இனங்கண்டு கவனத்திற் கொள்ளுதல்; அத்துடன்

(iv) மதிப்பீட்டின் இயைபான பெறுபேறுகள் பாடவிதானத்தில் செல்வாக்குச் செலுத்துவதை உறுதிப்படுத்துதல்.

(இ) அதன் கல்விசார் முன்னேற்றம், பாடவிதானத்தின் குறிப்பான அமைப்புக்கூறுகள் மற்றும் ஒட்டுமொத்த விளைவும் அதன் சமூகப் பொறுப்புக்கூறலின் அமைப்பை விசாலமாக விளக்குவதன் மூலம் ஒவ்வொரு ஐந்தாண்டும் சுயமதிப்பீடு செய்தல்;

(ஈ) ஆசிரியரினதும் மாணவரினதும் பின்னூட்டத்தை முறைமையாக நாடி, பகுப்பாய்ந்துஅவற்றுக்கு பதிலிறுப்பதுடன், பின்னூட்டப் பெறுபேறுகளை நிகழ்ச்சித்திட்ட மேம்பாட்டுக்காக உபயோகித்தல்;

(உ) மாணவர் மற்றும் பட்டதாரி தொகுதியினரின் பணியும் கருதப்படும் கல்விசார் விளைவும், அதன் பாடவிதானம் மற்றும் வழங்களுக்கான ஏற்பாடு தொடர்பில் அத்தொகுதியினரின் செயலாற்றுகையை பகுப்பாய்வு செய்தல்; அத்துடன்

(ஊ) அதன் கல்விசார் பணியாட்டொகுதியினரையும் மாணவர்களையும், முகாமைத்துவத்திலும் ஆளுகையிலும் அத்துடன் அதன் கல்விசார் நிகழ்ச்சித்திட்டத்தின் கண்காணிப்பிலும் மதிப்பீட்டிலும் ஈடுபடுத்துதல்.

**ஆளுகையும் முகாமைத்துவமும்:**

*17.* பல்கலைக்கழகம் அல்லது நிறுவனம் பின்வருவனவற்றைச் செய்தல் வேண்டும் -

(அ) அதன் ஆளுகைக் கட்டமைப்புக்களையும் பணிகளையும் மற்றும் இயைபாகவுள்ளவிடத்து, பல்கலைக்கழகத்தினுள் அல்லது நிறுவனத்தினுள் அவற்றின் உறவையும் வரையறுத்துக்கூறுதல் ஆளுகைக் கட்டமைப்புக்கள், குழுக்கட்டமைப்பை எடுத்துக்காட்டுதல் வேண்டும். ஆளுகைக் கட்டமைப்பு குழுக்கட்டமைப்பை உருவாதல் வேண்டும். ஆளுகைக் கட்டமைப்பு, குழுக்கட்டமைப்பை உருவாக்குதல் வேண்டுமென்பதுடன் கல்விசார் பணியாட்டொகுதியினர், மாணவர்கள் மற்றும் ஏனைய அக்கறை கொண்டோர்களிடமிருந்தான பிரதிநிதித்துவத்தைப் பிரதிபலித்தலும் வேண்டும்.

(ஆ) ஆளுகை மற்றும் அதன் முடிவுகள் குறித்த வேலையின் வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்துதல்;

(இ) அதன் கல்விசார் நிகழ்ச்சித்திட்டத்தை முகாமைசெய்வதற்கான அதன் கல்விசார் தலைமைத்துவத்தின் பொறுப்புக்களை வரையறுத்தல்;

(ஈ) அர்ப்பணிப்புள்ள கல்விசார் வரவு செலவுத்திட்டமொன்றினூடாக பாடவிதானத்தை வளப்படுத்துவதற்கும் பாடவிதானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான வளங்களை ஒதுக்கீடு செய்வதற்கும் மற்றும் கல்விசார் தேவைகளுக்குமான பொறுப்பினதும் அதிகாரத்தினதும் தெளிவான வழியொன்றைக் கொண்டிருத்தல்;

(உ) அதன் கல்விசார் நிகழ்ச்சித்திட்டத்தையும் தொடர்புடைய செயற்பாடுகளையும் நடைமுறைப்படுத்துவதற்கும், சிறந்த முகாமைத்துவம் மற்றும் வளப்பயன்பாடு என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கும், ஆதரவளிப்பதற்குத் தோதான நிருவாக மற்றும் உயர்தொழில்சார் பணியாட்டொகுதியொன்றைக் கொண்டிருத்தல்; அத்துடன்

(ஊ) சமூகத்தினதும் அரசாங்கத்தினதும் சுகாதார மற்றும் சுகாதாரத்துடன் தொடர்புடைய துறைகளினுள் ஆக்கபூர்வமான இடைவினையைக் கொண்டிருத்தல்.

**தொடர்ச்சியான புதுப்பித்தல்:**

*18.* பல்கலைக்கழகம் அல்லது நிறுவனம் பருகால நிறுவனஞ்சார் மதிப்பீடு/பணி, விளைவு, அனுமதிக்கும் செயன்முறையும் பயனுறுதன்மையும், கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களும் அவற்றின் இயைபுடையமையும், வளங்கள், வசதிகள் மற்றும் சுயாதீன மதிப்பீட்டுக் குழுவொன்றினால் பொறுப்பேற்கப்படக்கூடிய அதேபோன்றவற்றின் மீளாய்வு என்பவற்றையும் நடாத்துதல் வேண்டும்.

*19.* பல்கலைக்கழகம் அல்லது நிறுவனம் ஒவ்வொன்றும் ஆற்றல் வாய்ந்ததும் சமூக ரீதியில் பதிலளிக்க வேண்டியதுமான உருவகமொன்றென்ற வகையில் அது ஒழுங்குமுறையிலான உள்ளக மீளாய்வை நடாத்துதல் வேண்டும் என்பதுடன் அதன் விளைவு பின்வருவனவற்றுக்குப் பயன்படுத்தப்படலாம்:-

(அ) அதன் கட்டமைப்பையும் பணிகளையும் நாளதுரைப்படுத்தல் (updating);

(ஆ) அதன் குறைபாடுகளை சீர்செய்தல்; அத்துடன்

(இ) தொடர்ச்சியான புதுப்பித்தலுக்காக வளங்களை ஒதுக்கீடு செய்தல்.

*02 - 383*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.